## October 18, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பக்கூடிய இந்தியாவின் கனவுத் திட்டமான ககன்யான் திட்டத்தை 2027-க்குள் செயல்படுத்த இஸ்ரோ தீவிரம் காட்டி வருகிறது என்று அதன் தலைவர் வி.நாராயணன் தெரிவித்தார். திருநெல்வேலி மாவட்டம், வடக்கன்குளம் தனியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழாவில் பங்கேற்றபின், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:
    i. விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் இந்தியாவின் கனவுத் திட்டமான ககன்யான் திட்டத்தைசெயல்படுத்த இஸ்ரோ தீவிரம் காட்டி வருகிறது. இந்தத் திட்டத்தின்படி 2027-ஆம் ஆண்டு விண்வெளிக்கு மனிதர்களை அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
    ii. இதற்காக 80,000-க்கும் மேற்பட்ட சோதனைகள் நடைபெற்றுள்ளன. 3 ராக்கெட்டுகளை விண்ணில் செலுத்தி சோதனை செய்ய உள்ளோம். அதன்பின்பு 2027-இல் மனிதர்களை விண்ணுக்கு அனுப்புவோம்.
    iii. இந்திய வானிலை ஆராய்ச்சிக்கு அதிக அளவிலான செயற்கைக் கோள்களை அனுப்பி உள்ளதால் முன்கூட்டியே வானிலை குறித்த தகவல்களை மிகத் துல்லியமாகப் பெற முடிகிறது.
    iv. உலக அளவில் விண்வெளிக்கு ராக்கெட்டுகளை வணிகப் பயன்பாட்டுக்கு பயன்படுத்துவதில் இந்தியா 2 சதவீத பங்களிப்பை கொண்டுள்ளது. இதை 10 சதவீதமாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். தற்போது 10 ஆயிரம்கிலோ எடைகொண்ட 6 செயற்கைக் கோள்களை எடுத்துச் செல்லும் ராக்கெட்டுகளை வெற்றிகரமாக அனுப்பி உள்ளோம். 40 ஆயிரம் கிலோ எடை கொண்ட செயற்கைக்கோளை அனுப்புவதற்கு தேவையான ராக்கெட்டுகளை தயாரிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது. அதன் அடிப்படையில் அதை தயாரிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.
    v. ககன்யான் திட்டத்துக்கு 80 ஆயிரம் கிலோ செயற்கைக்கோளை சுமந்து செல்லும் ராக்கெட் தயாரிக்க வேண்டும். அதற்கான முயற்சிகளும், சோனைகளும் நடைபெற்று வருகின்றன என்றார்.
2. உணவுப் பொருள்கள் மீது ஒட்டப்படும் லேபிள் மற்றும் விளம்பரங்களில் 'ஓஆர்எஸ்' (வாய்வழி நீர்ச்சத்து ஊட்ட திரவம்) என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும்' என்று அனைத்து உணவு தயாரிப்பு நிறுவனங்களுக்கும் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆணையம்(எஃப்எஸ் எஸ்ஏஐ) அறிவுறுத்தலை வழங்கியுள்ளது. எஃப்எஸ்எஸ்ஏஐ சார்பில் கடந்த 14-ஆம் தேதி வெளியிடப்பட்ட உத்தரவில் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
    i. அவ்வாறு, உணவுப் பொருள்கள் மீது 'ஓஆர்எஸ்' என்ற வார்த்தையை முத்திரையாகவோ அல்லது துணைப் பெயர்களாகவோ பயன்படுத்துவது உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு சட்டம் 2006- மீறும் செயல். பொருள்கள் மீது தவறாக முத்திரையிடுதல் மற்றும் நுகர்வோரை தவறாக வழிநடத்துதல் காரணங்களுக்காக இச்சட்டத்தின் கீழ் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.
    ii. மேலும், 'இந்தப் பொருள் உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்ததைப் போன்ற 'ஓஆர்எஸ்' வழிமுறைப்படி தயாரிக்கப்பட்டது அல்ல என்ற எச்சரிக்கை வாசகத்துடன் தங்களின் உணவுப் பொருள்கள் மீது 'ஓஆர்எஸ்' என்ற வார்த்தையை அச்சிட்டுக் கொள்ள அனுமதித்து கடந்த 2022-ஆம் ஆண்டு ஜூலை மற்றும் 2024-ஆம் ஆண்டு பிப்ரவரியில் வெளியிடப்பட்ட

அறிவுறுத்தல்கள் இந்த உத்தரவு மூலம் திரும்பப் பெறப்படுவதாகவும் எஃப்எஸ்எஸ்ஏஐ தெரிவித்துள்ளது.

3. கிரீஸில் நடைபெறும் ஷாட் கன் உலக சாம்பியன்ஷிப்பில், இந்தியாவின் ஜோராவர் சிங் சாந்து வெண்கலப் பதக்கம் வென்றார்.
    i. உலக சாம்பியன்ஷிப்பில் இது அவரின் முதல் பதக்கம் என்பதும், இந்தப்போட்டியில் இந்தியாவின் முதல் பதக்கம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.
4. 23வது ஆண்கள் கால்பந்து உலகக் கோப்பை 2026 அடுத்த ஆண்டு ஜூன் 11 முதல் ஜூலை 19 வரை கனடா, மெக்சிகோ மற்றும் அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளில் 16 நகரங்களில் நடைபெறும். மொத்தம் 48 அணிகள் பங்கேற்கும்.
5. உள்நாட்டு ராணுவத் தளவாட உற்பத்தியை 100 சதவீதமாக உயர்த்துவதே நம் இலக்கு என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
    i. மகாராஷ்டிர மாநிலம், நாசிக்கில் தேஜஸ் எம்கே1ஏ இலகுரக போர் விமானங்களின் உற்பத்தியை அவர் தொடங்கிவைத்தார். தேஜஸ் போர் விமானங்களைத் தயாரிப்பதற்கான பிரிவைத் தொடங்கியுள்ளதன் மூலம் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் 24 இலகுரக போர் விமானங்களைத் தயாரிக்க உள்ளது.
6. பிரதமர் நரேந்திர மோடியை இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூரியா சந்தித்து பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதித்தார்.
    i. தில்லியில் உள்ள மோடியின் இல்லத்தில் அவரை ஹரிணி அமரசூரியா சந்தித்தார். அப்போது வளர்ச்சி ஒத்துழைப்பு, இந்திய மீனவர்களின் நலன் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.
7. வங்கதேசத்தில் அடுத்த ஆண்டு நடைபெற விருக்கும் தேர்தல்களுக்குப் பிறகு கொண்டுவரப்படவிருக்கும் ஜனநாயக சீர்திருத்தங்களை உறுதி செய்வதற்கான சாசனத்தில் முக்கிய கட்சிகள் கையொப்பமிட்டன.
    i. கடந்த ஆண்டு நடைபெற்ற தீவிர மாணவர் போராட்டத்துக்குப் பிறகு அப்போதைய பிரதமர் ஷேக் ஹசீனாவின் ஆட்சி கவிழ்ந்ததை அடுத்து இந்த சீர்திருத்த சாசனம் உருவாக்கப்பட்டுள்ளது.
    ii. இந்த சாசனத்தில் முக்கிய எதிர்க்கட்சியான வங்கதேச தேசியவாத கட்சி மற்றும் இஸ்லாமிய கட்சியான ஜமாஅத்-இ-இஸ்லாமி ஆகிய கையொப்பமிட்டாலும், ஹசீனாவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த மாணவர்களால் தொடங்கப்பட்ட தேசிய குடிமக்கள் கட்சி விழாவை புறக்கணித்தது பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.
    iii. முகமது யூனுஸ் - வங்கதேசஅரசின் தலைமை ஆலோசகர்.
8. உலகின் மிகப்பெரிய உணவு எண்ணெய் இறக்குமதி நாடான இந்தியா, தனது பாமாயில் தேவையை இந்தோனேசியா, மலேசியா விலிருந்து நிறைவு செய்கிறது. சோயா எண்ணெய்யை ஆர்ஜென்டினா, பிரேஸில், ரஷியாவிலிருந்தும், சூரியகாந்தி எண்ணெய்யை ரஷியா, உக்ரைனிலிருந்தும் இந்தியா இறக்குமதி செய்கிறது.
9. ஆணவக் கொலையைத் தடுக்க தமிழ்நாடு அரசு புதிய சட்டம் இயற்றும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
    i. இந்தச் சட்டத்தை இயற்றுவதற்குத் தேவையான பரிந்துரைகளை அளிப்பதற்காக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் ஆணையம் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

10. தமிழகம் இத்தாலி இடையே இலக்கிய, கலாசார பரிமாற்றம் தொடர்பாக ஜெர்மனியில் நடைபெற்று வரும் பிராங்பர்ட் சர்வதேச புத்தகத் திருவிழாவில்

புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

i. உலகப் புகழ் பெற்ற பிராங்பர்ட் புத்தகத் திருவிழா ஜெர்மனியில் கடந்த புதன்கிழமை (அக். 15) தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில், தமிழக அரசின் சார்பில் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலர் பி.சந்தரமோகன் உள்ளிட்ட 10 கொண்ட குழுவினர் பங்கேற்று சிறப்பு அரங்கு அமைத்துள்ளனர்.

ii. இந்த நிலையில், திருவிழாவில் இரண்டாம் நாளான நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழகத்தின் சென்னை சர்வதேச புத்தகக் காட்சி (சிஐபிஎஃப்) - இத்தாலியின் பொலோனியா குழந்தைகள் புத்தகக் காட்சி நிறுவனம் இடையே இலக்கிய, கலாசார பரிமாற்றம் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

iii. இதன்மூலம் தமிழின் சிறந்த நூல்கள் உலகெங்கும் உள்ளவாச கர்களுக்கு எடுத்துச்செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பொலோனியாவில் நடைபெறும் புத்தகக் காட்சியில் தமிழில் தேர்வு செய்யப்பட்ட புத்தகங்கள் இடம்பெறும்; அது தொடர்பான விவாத நிகழ்ச்சிகள் நடைபெறும். மேலும், சென்னையில் அடுத்த ஆண்டு நடைபெறும் சர்வதேச புத்தகத் திருவிழாவில் இத்தாலியின் பொலோனியா குழந்தைகள் புத்தகக் காட்சி நிறுவனம் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கும் என பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

11. சென்னையில் உள்ள தேசிய கடல்வளத் துறை தொழில்நுட்பக் கழகத்தில் நடைபெற்ற புவி அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க மாநாட்டின் 2025 அறிமுக நிகழ்வில், நீலப் பொருளாதார விவரங்கள் தொகுப்பை வெளியிட்ட தேசிய கடல்வளத் துறை தொழில்நுட்ப இயக்குநர் பாலாஜி ராமகிருஷ்ணன்.

i. உடன், இந்திய தேசிய பெருங்கடல் தகவல் சேவைமைய இயக்குநர் பாலகிருஷ்ணன் நாயர், தேசிய கடற்கரை ஆய்வு மைய இயக்குநர் ஆர்.எஸ் கன்காரா, ஆழ்கடல் இயக்க இயக்குநர் எம்.வி.ரமணமூர்த்தி, மத்திய புவி அறிவியல் அமைச்சக விஞ்ஞானி பிகே ஸ்ரீவஸ்தவா.